14.03.2025 STC 12/2024 PW1. ராஜ்குமார்

கடந்த 16.04.2024–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு 26.07.2024 குறுக்கு விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் இந்நீதிமன்ற MP.02/2024 dated 03.03.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

| வரிசை எண் | விவரம் | குறியீடு செய்யப்பட்ட விவரம் | ஆட்சேபணை |
|---|---|---|---|
| 12. | என்னுடைய மனைவி சகாயா ரெஜினியின் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின் கணக்கு விவரப் பட்டியல் | Ex.P.12 | NA |
| 13. | என்னுடைய SBI வங்கி, குளச்சல் கிளையின் வங்கி கணக்கு விவரப் பட்டியல் | Ex.P.13 | NA |

**குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள Ex.P12 ஆவணத்தில் 13.09.2021 அன்று மீதம் உள்ள தொகை ரூபாய் 1264 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். 13.09.2021 தேதிக்கு பிறகு எனது மனைவியின் வங்கிக் கணக்கில் பணம் இல்லாத காரணத்தினால், நான் அதற்கு பிறகு உள்ள வங்கிக் கணக்குப் பட்டியலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2. நான் இவ்வழக்கில் கூறியுள்ளது போல் 22.09.2021 அன்று குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எனது வங்கிக் கணக்குப் பட்டியலில் பணபரிவர்த்தனை எதுவும் இல்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கிற்காக பின்ஆலோசனையின் பேரில் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.